# கற்பகம்

திங்கள் இதழ்

Kutpakam

விலை ரூபா 10.00

மலர்-06 ஜனவரி-2013 இதழ்-62


## குறளமுதம்-62

வள்ளுவர் வாய்மொழியை எத்திறத்தாரும் எளிதில் பொருளுணர்ந்து படிப்பதற்கு ஏதுவாக "கற்பகம்" தொடர்ந்து குறளமுதத் தரும்.

**அதிகாரம்-6 அறத்துப்பால் மக்கட்பேறு**

எழுபிறப்பும் தீயவை தீண்டா பழிபிறங்காப்
பண்புடை மக்கட் பெறின்

பழி இல்லாத நற்குணங்களையுடைய மக்களைப் பெற்றால், பெற்றோர்க்கு ஏழு பிறவியிலும் துன்பங்கள் அணுகமாட்டா.

# சங்கானைச் சங்கத்தில் 40வது ஆண்டு விழா!

சங்கானை பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் 40வது ஆண்டு நிறைவு விழாவையும் தமது ஓய்வுபெற்ற அங்கத்தவர்களுக்கான மாதாந்த வாழ்வாதார கொடுப்பனவு வழங்கும் நிகழ்வையும் கடந்த மாதம் 17ம் திகதி முற்பகல் சங்க மண்டபத்தில் நடத்தியது.



சங்கத் தலைவர் திரு பெ.தேவராசா தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வுக்கு யாழ்.கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் திரு வீ.கே.அருந்தவநாதன் பிரதம விருந்தினராகவும், பனை அபிவிருத்திச் சபைத் தலைவர் திரு பசுபதி சீவரத்தினம், மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி அலுவலர் திரு இ.பாலச்சந்திரன், வலி.மேற்கு பிரதேசசபை எதிர்க் கட்சித் தலைவரும், ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் அமைப்பாளருமாகிய திரு சிவகுரு பாலகிருஸ்ணன்(ஜீவன்), சங்கானைப் பிரதேச செயலக உதவி திட்டமிடல் பணிப்பாளர் திரு வீ.சிவகுமார், சங்கானை மதுவரிப் பொறுப்பதிகாரி திரு ந.நந்தகுமார், வலிகாமம். மேற்கு பிரதேசசபை தவிசாளர் திருமதி நா.ஐங்கரன், சங்கானை கோட்டக் கல்விப்பணிப்பாளர் செல்வி அ.சா.மரியாம்பிள்ளை,**(7ம் பக்கம் பார்க்க)**

## சமாசத்தினால் 2012ம் ஆண்டுக்கான சமூக அபிவிருத்தி நலத்திட்டத்தின் கீழான பாடசாலை உபகரணங்கள் வழங்கல்!

வடமாகாண பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் தனது உறுப்புரிமைச் சங்கங்கள், கொத்தணிகளின் அங்கத்தவர்கள், பணியாளர்களின் பிள்ளைகளின் கல்வியினை ஊக்குவிக்கும் வகையில் வருடாந்தம் பல இலட்சம் ரூபா பெறுமதியான பாடசாலை உபகரணங்களை வழங்கி வருகின்றது.

சமாசத்தின் சமூக அபிவிருத்தி நலத்திட்டத்தின் கீழ் 2002ம் ஆண்டு தொடக்கம் தொடர்ச்சியாக 10 ஆண்டுகளாக இக்கல்வி ஊக்குவிப்பு நடவடிக்கையை மேற்கொண்டு வருகிறது.

இத்திட்டத்தின்மூலம் சுமார் 4 ஆயிரம் அங்கத்தவர், பணியாளர்களின் பிள்ளைகள் பயனடைந்து வருகின்றார்கள்.

இவ்வாண்டும் சுமார் ரூபா 8 இலட்சம் பெறுமதியான பாடசாலை உபகரணங்கள் 2012ம் ஆண்டில் செயற்பட்ட அங்கத்தவர்கள், பணியாளர்கள், பாலர் பாடசாலை ஆசிரியர்கள் ஆகியோருக்கு சமாசத்தால் வழங்கப்படுகின்றன.

**'கற்பகம்' வாசகர்கள் அனைவருக்கும் நத்தார், புதுவருட மற்றும் தைப்பொங்கல்**

**நல்வாழ்த்துக்கள்**

## இம்மாதம் சுமார் 2 இலட்சம் ரூபாவை ஓய்வூதியமாக சமாசம் வழங்கியது!

60 வயதினைப் பூர்த்திசெய்து ஓய்வுபெற்ற சங்கங்களின் அங்கத்தவர்களுக்கு மாதாந்த ஓய்வூதியமாக நிலுவையுடன் சுமார் 1இலட்சத்து 99 ஆயிரத்து 837 ரூபாவினை சமாசம் வழங்கியுள்ளது. **(6ம் பக்கம் பார்க்க)**

## பொங்கல்பொதி அன்பளிப்பு

தைப்பொங்கல் திருநாளை முன்னிட்டு பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்கள் சில தமது அங்கத்தவர்கள், பணியாளர்கள், பாலர் பாடசாலை ஆசிரியர்கள் ஆகியோருக்கு பொங்கல்பொதியினை அன்பளிப்பாக வழங்கியுள்ளன.

**(8ம் பக்கம் பார்க்க)**

## வருடாந்த ஒன்றுகூடலும் சேவைநலன் பாராட்டும்!

சமாச பணியாளர் நலன்புரிச் சங்க வருடாந்த ஒன்றுகூடல் நிகழ்வும், ஓய்வுபெற்ற சமாசப் பணியாளர் திரு க.சண்முகம் அவர்களின் சேவை நலன் பாராட்டும் இம்மாதம் 5ம் திகதி சனிக்கிழமை **(6ம் பக்கம் பார்க்க)**



வடமாகாண பனை தென்னை வள அ.கூ.ச.சமாசத்தின் ஓய்வுபெற்றுச் சென்ற பணியாளரான திரு க.சண்முகம் அவர்களின் சேவைநலன் பாராட்டு விழாவின்போது...

**சிந்தனைத்துளி**

"நீ உலகத்தைப் பற்றி அறிந்துகொள்வதே அதனிடமிருந்து உன்னை பாதுகாத்துக் கொள்ள ஒரே வழி" -அறிஞர்-

# கற்பகக்கரு

## அபிவிருத்தியை நோக்கி....!

2012ம் ஆண்டில் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்கள் பலதரப்பட்ட பிரச்சினைகளுக்கு முகம்கொடுத்து அப்பிரச்சினைகளிலிருந்து விடுபட்டு, 2013ம் ஆண்டில் காலடி எடுத்து வைத்துள்ள நிலையில், கடந்த ஆண்டிலும் பார்க்க சிறந்த பல அபிவிருத்தித் திட்டங்களைத் தீட்டி இன்றைய சவால்களை முறியடித்து வெற்றிகரமாக செயற்படவேண்டிய கடப்பாடு அனைத்துச் சங்கங்களுக்கும் உண்டு என்பதை சங்கங்களின் நிர்வாகம் மறந்துவிடக்கூடாது.

சங்கங்களும், கொத்தனிகளும், சமாசமும் ஆண்டுதோறும் நடப்பாண்டுக்கான வருடாந்த வரவு-செலவுத் திட்டத்தை உத்தேச மதிப்பீடுகளுடன் தயார் செய்துவருவது வழமையான ஒரு நடவடிக்கையாக உள்ளது. இந்நடவடிக்கை 12 மாதங்களுக்கான ஒரு செயற்பாட்டையும், அச்செயற்பாட்டின்மூலம் சங்கங்களும் சமாசமும் இலாபம் ஈட்டி அங்கத்தவர்களுக்கும் பணியாளர்களுக்கும் பலதரப்பட்ட சேவைகளை ஆற்றிவருவது கண்கூடாக உள்ளது.

திட்டமிட்ட அடிப்படையில் ஒவ்வொரு சங்கங்களும் கொத்தனிகளும் சமாசமும் தனது அபிவிருத்தித் திட்டங்களை தயாரித்து அதனை வரவு-செலவுத் திட்டத்தில் உள்வாங்கி தங்களது குறிக்கோளை அடைவதற்கு முயற்சிக்க வேண்டும். இம்முயற்சியில் சங்கத்தில் அங்கத்துவம் பெற்றுள்ள அங்கத்தவர்கள், பணியாற்றும் பணியாளர்கள், சமூக நலன்விரும்பிகள் அத்தனை பேரும் ஒன்றுபட்டு சங்க நிர்வாகங்களுக்கு ஒத்துழைப்பு வழங்க முன்வரவேண்டும்.

ஒருவர் பலருக்காகவும், பலர் ஒருவருக்காகவும் உதவுவதே கூட்டுறவின் தலையாய குறிக்கோளாக இருந்துவருவதனால், இதனை அங்கத்தவர்கள், பணியாளர்கள், நிர்வாகிகள் அனைவரும் கருத்து முரண்பாடுகளுக்கும் அநாவசியமான விமர்சனங்களுக்கும் உள்ளாக்காமல் சங்கங்களை நல்ல முறையில் நடத்துதல் அவசியம்.

காலத்தின் தேவையை உணர்ந்து பனை வளத்திலிருந்து பெறக்கூடிய அத்தனை நுகர்வுப் பொருட்களையும் எமது மரபு வழிவந்த பொறிமுறைகளைக் கையாண்டு தொழில்சார் நிபுணர்களின் ஆலோசனைகளைப் பெற்று அதற்கேற்ற வகையில் புதிய திட்டங்களை தயாரிப்பதில் சங்க நிர்வாகிகள் அதிக கவனம் செலுத்த வேண்டும்.

திட்டங்கள் தயாரிக்கப்படும்போது அத்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதில் உள்ள சிக்கல்களை முன்கூட்டியே உணர்ந்து, அவற்றினால் ஏற்படும் தடைகளை தகர்த்தெறிந்து பிரதேச மக்களின் தேவைகளை பூர்த்திசெய்வதுடன், அங்கு நிலவுகின்ற இளைஞர், யுவதிகளின் வேலையில்லாப் பிரச்சினைகளுக்கும் தீர்வுகாண வேண்டிய கடப்பாடு உண்டு என்பதை சங்க நிர்வாகங்கள் மறந்துவிடக்கூடாது.

நாற்பது ஆண்டுகள் வெற்றிநடை போட்டு வரும் சங்கங்களும், கொத்தனிகளும், சமாசமும் தொடரும் ஆண்டுகளில் அங்கத்தவர்கள், பணியாளர்கள் ஆகியோரின் சமூக, பொருளாதாரத்தை வளம்படுத்தக்கூடிய வகையில் அனைவரும் ஒன்றுபட்டு செயலாற்றி தங்களைத் தாங்களே வளமாக்கிக் கொள்வதற்கு முன்வரவேண்டும். 'ஒற்றுமை உண்டேல் அனைவருக்கும் வாழ்வு' என்ற தாரக மந்திரத்தின் அடிப்படையில் கூட்டுறவின்மூலம் மக்கள் வாழ்க்கையை வளம்படுத்த வேண்டும் என கற்பகம் கேட்டுக்கொள்கிறது.

"அங்கத்தவர்களின் ஆதரவே கற்பகத்தின் பலம்" ஆசிரியர்

# இலங்கையின் நீதிமன்ற அமைப்பு

## வரலாறு சார்ந்த அபிவிருத்தி 8

சகல பிரதம மத்தியஸ்த சபைகளிலும் தலைவர் பிரதான மத்தியஸ்தர்களுள் ஒருவரைக் கொண்டிருக்கும். மத்தியஸ்தர்களின் கருமங்கள் யாதெனில், பிணக்குகளுடன் தொடர்பான இரு தரப்பினரையும் அழைத்து, பிணக்குகளுக்கு ஏதுவான காரணங்களைக் கலந்தாலோசித்து இணக்கத்துக்கு வருவதற்கு உதவியளித்தலாகும். எப்படியிருந்தபோதிலும் பிணக்குக்கு முன்வந்த தரப்பினர்கள் சார்பாக தீர்மானத்தை எடுத்தல் அல்லது குற்றம் செய்த ஆட்களைத் தீர்மானிப்பது மத்தியஸ்தர்களினால் நடைபெறமாட்டாது. பிணக்கு ஒன்றை இணக்கம் காண்பதற்காக ஒரு சந்தர்ப்பத்தில் மத்தியஸ்தர்கள் மூன்று பேர்கள் அடங்கிய சபை ஒன்று நியமிக்கப்படும்.

### 8.1 மத்தியஸ்த சபையினால் தீர்வு காணப்படக்கூடிய பிணக்குகள்

**01 சிவில் பிணக்குகள்**

❑ கடனாகக் கொடுத்த பணத்தை அறவிட்டுக்கொள்ளல்- உங்களால் இன்னொருவருக்குக் கொடுக்கப்பட்ட கடன் காசு திரும்பவும் உங்களுக்குச் செலுத்தப்படாதபோது, அந்தக் கடன் தொகையை அறவிட்டுக்கொள்வதற்கு.

❑ நட்டஈட்டுப்பணத்தை பெற்றுக்கொள்வதற்கு - உங்களுக்கு ஏற்பட்ட ஏதாவதொரு நட்டத்தை மீண்டும் பெற்றுக்கொள்வதற்கு, பணத்தை அறவிட்டுக்கொள்வதற்கு.

❑ அசையாத மற்றும் அசையும் சொத்துக்கள் பற்றிய பிணக்கு - ஏதாவதொரு சொத்தின் உரிமை அல்லது ஆட்சியை ஆண்டனுபவிக்கும் உரிமைகள் யாருக்கு செல்ல வேண்டும் போன்றவைகள் பற்றிய பிணக்குகளைத் தீர்த்துக்கொள்ளல்.

**02 சிறிய குற்றவியல் குற்றங்கள் தொடர்பான பிணக்குகள்**

❑ தன்னிச்சைப்படி காயம் விளைவித்தல் - யாராவது ஒரு நபருக்கு அவருடைய உடலுக்கு தீங்கு விளைவித்தல், அடித்தல் போன்ற விடயங்கள் தொடர்பான பிணக்குகள்.

❑ முறையற்ற தடைகள், தொல்லைகள் - ஏதாவதொரு இடத்துக்கு, சொத்துக்கு செல்வதற்குரிய உரிமையை முறையற்ற விதத்தில் தடுத்தல், சட்டபூர்வமான ஒரு செயலைச் செய்வதற்கு இடம்கொடாதிருத்தல் போன்ற விடயங்கள்.

❑ தொந்தரவு செய்தல் அல்லது குற்றவியல் பலாத்காரம் - ஒருவரின் உடலுக்கு அல்லது உள்ளத்துக்கு தீங்கு விளைவித்தல் அல்லது ஏதாவதொரு செயலைச் செய்யும்படி அல்லது செய்யாதிருக்கும்படி சட்டவிரோதமாக பலவந்தப்படுத்தல்.

❑ ஒருவருக்கு அபகீர்த்தி உண்டாக்கல் - நபர் ஒருவருடைய புகழுக்கு தீங்குவிளைவிக்கும் வகையில் இன்னொரு நபர் செயற்பட்டிருக்கும் வேளையில் அது தொடர்பான முறையீடுகள்.

### 8.2 மத்தியஸ்த சபைக்கு முறைப்பாடு ஒன்றைச் செய்தல்

1. தன்னுடைய பெயர், முகவரி மற்றும் பிணக்கு தொடர்பான மற்றைய தரப்பினரின் பெயர் மற்றும் முகவரிகளையும் விளக்கமாகக் குறிப்பிட்டு பிணக்குகள் பற்றிய விளக்கமான விபரத்துடன் மத்தியஸ்த சபையின் தலைவருக்கு அனுப்பப்படவேண்டும். தலைவரினால் பின்பு ஒரு சந்தர்ப்பத்தில் இருவரையும் விசாரணைக்கு அழைப்பதற்கான அழைப்பிதழ் விடுக்கப்படும். மத்தியஸ்த சபையின் தலைவருடைய பெயர் மற்றும் முகவரியைப் பெறுவதற்காக உங்கள் பிரதேச கிராமசேவகரை சந்திக்கவும்.

2. பிரதேசத்தின் பொலிஸ் நிலையத்துக்கு கொடுக்கப்படும் முறைப்பாடுகள் சட்டத்தின் பிரகாரம் இணக்கத்துக்கு அனுப்பப்பட வேண்டிய சந்தர்ப்பத்தில் பொலிஸ் நிலையத்தினால் மத்தியஸ்த சபைக்கு அனுப்பப்படும்.

-வளரும்-

# யாழ்.மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி அலுவலர்களுக்கான கடமை ஒதுக்கீடு

யாழ்.மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கான 2013ம் ஆண்டுக்கான பனை தென்னை வள கூட்டுறவு நிறுவனங்களுக்கான புதிய கடமை ஒதுக்கீடுகள் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் திரு வீ.கே.அருந்தவநாதன் அவர்களால் வழங்கப்பட்டுள் ளன.

இக்கடமை ஒதுக்கீடுகள் 01.01.2013லிருந்து அமுல்படுத்தப்படுவதாகவும் உதவி ஆணையாளரால் அறிவுறுத்தப்பட்டுள்ளது. இக்கடமை ஒதுக்கீடுகள் தொடர்பான விபரம் வருமாறு,

**திரு இ.பாலச்சந்திரன்**
பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்கள், கொத்தணிகள், சமாசம், சித்தவைத்திய சேவைக் கூட்டுறவுச் சங்கம் என்பவற்றின் மேற்பார்வை அலுவலகக் கடமை.

**திரு இ.விஜயமோகனராசா**
வடமராட்சி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணி அலுவலகக் கடமை, புள்ளிவிபரம், கல்விப் பயிற்சியளிப்பு வேலைத்திட்டம்.

**திரு தி.வித்தககலாநிதி**
தென்மராட்சி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணி, யாழ்ப்பாணம் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணி அலுவலகக் கடமை.

**திரு அ.விமல்ராஜ்**
வலிகாமம் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணி.

**திரு வி.கு.வின்சன் ஞானதயாளன்**
அனலைதீவு பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம், அரியாலை பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் ஆகியவற்றின் புள்ளிவிபரம்.

**திரு தா.தவமன்னன்**
மானிப்பாய் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம், கொடிகாமம் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்.

**திரு ம.கபிலன்**
சுன்னாகம் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம், பண்டத்தரிப்பு பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்.

**திரு ப.சஞ்சீவன்**
வேலணை பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம், யாழ்ப்பாணம் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் புள்ளி விபரம்.

**திரு த.கண்ணதாசன்**
காரைநகர் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம், சாவகச்சேரி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்.

**திரு ச.பிறேமிலன்**
கோண்டாவில் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம், கரவெட்டி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்.

**திரு பா.வாகீசன்**
சங்கானை பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம், தெல்லிப்பளை பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்.

**திரு சி.அருணோதயன்**
சித்த வைத்தியசேவைக் கூட்டுறவுச் சங்கம், ஊர்காவற்றுறை பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்.

**திரு கு.நிசாந்தன்**
நெடுந்தீவு பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்,

**திரு கு.சஜீவன்**
அச்சுவேலி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம், கோப்பாய் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்.

**திரு தி.பிரதீப்**
பருத்தித்துறை பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம், வடமராட்சி கிழக்கு பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்,

## கல்வி உத்தியோகத்தர்கள் மாதாந்த மாநாடு!

கல்வி உத்தியோகத்தர்களுக்கான மாதாந்த மாநாடு இம்மாதம் 10ம் திகதி சமாச கூட்டுறவாளர் மண்டபத்தில் தலைமைக் காரியாலய கூட்டுறவுப் பரிசோதகர் திரு இ.விஜயமோகனராசா தலைமையில் மு.ப.11.00 மணியளவில் நடைபெற்றது.

இம்மாநாட்டுக்கு சமாசத் தலைவர், சமாசப் பொது முகாமையாளர், சங்கங்களின் கல்வி உத்தியோகத்தர்கள், சமாசக் கல்வி உத்தியோகத்தர், மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் ஆகியோர் சமூகமளித்திருந்தனர்.

இம்மாநட்டில் தை மாதம் சமாசத்தினால் மேற்கொள்ளப்படவுள்ள கல்விப் பயிற்சி தொடர்பாக ஆராயப்பட்டது. இதற்கமைய கூட்டுறவுத் திணைக்களமும் சமாசமும் இணைந்து இம்மாதம் 23ம் திகதி வடமராட்சி கிழக்கு ப.தெ.வ.அ.கூ. சங்கத்தின் அனைத்து அங்கத்தவர்களுக்குமான முழுமையான பயிற்சியினை நடத்துவதற்கு தீர்மானிக்கப் பட்டது.

இப்பயிற்சி நெறிக்கு வளவாளர்களாக கூட்டுறவுத் திணைக்கள உத்தியோகத்தர்களும், மாவட்ட கூட்டுறவுச் சபைச் செயலாளர், சமாச கல்வி உத்தியோகத்தர் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

அடுத்து கரவெட்டி சங்கத்தின் சகல அங்கத்தவர்களுக்குமான பயிற்சிநெறி இம்மாதம் 28ம் திகதி சங்க பணிமனையில் நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டது.

மேலும் மாசி மாதம் 7ம் திகதி சமாச மட்டப் பயிற்சி ஒன்றினையும் நடத்துவதற்கும், அப்பயிற்சி நெறியில் சங்கங்களின் 18-35 வயதுக்கு இடைப்பட்ட அங்கத்தவர்களை (சங்கம் ஒன்றுக்கு 5 பேர்) அழைத்து அவர்களுக்கு கூட்டுறவுத் தலைமைத்துவம், சங்க துணைவிதிகள் தொடர்பாகவும் அங்கத்தவர்களது கடமைகள் பொறுப்புக்கள் தொடர்பாகவும் சமாசத்தின் விபத்து ஓய்வுநலத்திட்ட நடைமுறைவிதி தொடர்பாகவும் முழு நேரப் பயிற்சி வழங்கப்படவேண்டுமென தீர்மானிக்கப்பட்டது.

## சங்கங்களின் வருடாந்தப் பொதுக்கூட்டங்கள்!

பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் வருடாந்தப் பொதுக்கூட்டங்கள் நடைபெற்றும், நடைபெறவுமுள்ளன.

கடந்த மாதம் 24ம் திகதி சங்கானை பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கமும், 29ம் திகதி அச்சுவேலி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கமும், இம்மாதம் 8ம் திகதி வடமராட்சிக் கொத்தணியும் தமது பொதுக் கூட்டங்களை நடத்தியிருந்தன.

இம்மாதம் 20ம் திகதி வேலணை பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கமும், 21ம் திகதி அரியாலை பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கமும், 22ம் திகதி அனலைதீவு பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கமும், 26ம் திகதி கொடிகாமம் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கமும், 31ம் திகதி சாவகச்சேரி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கமும், அடுத்த மாதம் 07ம் திகதி யாழ்ப்பாணம் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கமும் தமது வருடாந்தப் பொதுக் கூட்டங்களை நடத்தவுள்ளன.

# நிகழ்வுகளின் நிழல்கள்

**பனை தென்னை வள அபி.கூட்.சங்கங்களின் 40வது ஆண்டு நிறைவு விழாவும் ஓய்வுபெற்ற அங்கத்தவர் களுக்கான வாழ்வாதாரக்கொடை வழங்கல் நிகழ்வும் சங்கானை சங்கத்தில் நடைபெற்றபோது...**














# நிகழ்வுகளின் நிழல்கள்

**வடமாகாண பனை தென்னை வள அபிவிருத்தி கூட்.சங்கங்களின் சமாசத்தின் ஓய்வுபெற்ற பணியாளரான திரு க.சண்முகம் அவர்களின் சேவைநலன் பாராட்டு விழாவின் பதிவுகள்**










## சமாசம் கடந்த வருடம் நடத்திய 90வது சர்வதேச கூட்டுறவுதின விழாவின் பதிவுகள்











### சங்கானை சங்கத்தில் 40வது.............. 1ம் பக்கத் தொடர்ச்சி

சமாசத் தலைவர் திரு நா.கணேசன், வலிகாமம் கொத்தணித் தலைவர் திரு செ.செல்வராசா ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும், யாழ். மாவட்ட பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவு நிறுவனங்களின் பணியாளர் நலன்புரிச் சங்கத் தலைவர் திரு கா.சிவஞானம்,, தலைமைக்காரியாலய கூட்டுறவுப் பரிசோதகர்கள் திரு இ.விஜயமோகனராசா, திரு தி.வித்தககலாநிதி ஆகியோரும் சங்கானை தெற்கு கிராம சேவையாளர் திருமதி குமரகுரு லலிதாம்பாள், சமாசப் பொதுமுகாமையாளர் திரு ஜே.பி. குணரத்தினம், சங்கானை தெற்கு சமுர்த்தி உத்தியோகத்தர் திருமதி உ.கிருஸ்ணபவானி, வலிகாமம் கொத்தணி பொதுமுகாமையாளர் திரு க.சுதாகரன், சங்கானை ப.நோ. கூ.சங்க உப தலைவர் வ.சற்குணசிங்கம், சுன்னாகம், தெல்லிப்பளை, காரைநகர், கோண்டாவில், மானிப்பாய், பண்டத்தரிப்பு ஆகிய சங்கங்களின் தலைவர்கள், பொதுமுகாமையாளர்கள் ஆகியோர் கௌரவ விருந்தினர்களாகவும் கலந்துகொண்டனர்.

இந்நிகழ்வில் ஓய்வுபெற்ற அங்கத்தவர்களுக்கான வாழ்வாதார கொடுப்பனவுகளும் கௌரவிப்பும், ஓய்வுபெற்ற முன்னாள் தலைவர்கள், பொதுமுகாமையார்கள் கௌரவிப்பும், முன்பள்ளி ஆசிரியர்கள் கௌரவிப்பும், சிறந்த அங்கத்தவர், பணியாளர் கௌரவிப்பும், புலமைப்பரிசில், க.பொ.த சா/த, உ/த சித்திபெற்ற மாணவர்கள் கௌரவிப்பும் இடம் பெற்றன.

### இம்மாதம்... 1ம் பக்கத் தொடர்ச்சி

இம்மாதம் 10 ம் திகதி சமாச கூட்டுறவாளர் மண்டபத்தில் நடைபெற்ற கல்வி உத்தியோகத்தர் மாதாந்த மாநாட்டின்போது சுமார் 17 அங்கத்தவர்களுக்கான காசோலை வழங்கும் நிகழ்வு சமாசத் தலைவர் திரு நா.கணேசன் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் விருந்தினராக வருகை தந்த மாவட்ட கூ.அ.அலுவலர் திரு இ.பாலச்சந்திரன் அவர்கள் இவர்களின் சேவைகளைப் பாராட்டியதோடு, இவர்களுக்கான காசோலைகளையும் வழங்கினார்.

சமாசத் தலைவர் தனது உரையில், அங்கத்தவர்கள் விசுவாசமாக தமது உற்பத்திகளை ஒப்படைத்ததன்மூலம் இன்று ஒரு சங்கத்தைச் சேர்ந்த ஓய்வுபெற்ற அங்கத்தவர் ஒருவர் மாதாந்தம் சுமார் ரூபா 7,500 இனை ஓய்வூதியமாகப் பெறுகின்றமை ஏனைய அங்கத்தவர்களுக்கு ஒரு முன்னுதாரணமாக இருப்பதுடன், எனக்கு பெரும் மனநிறைவையும் தருகின்றது எனத் தெரிவித்தார்.

### வருடாந்த..... 1ம் பக்கத் தொடர்ச்சி

முற்பகல் சமாச பணியாளர் நலன்புரிச் சங்கத் தலைவர் திரு ஜே.பி.குணரத்தினம் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் சமாசப் பணியாளர்கள், நிர்வாக உறுப்பினர்கள் மற்றும் யாழ்ப்பாணம் கூட்டுறவுத் திணைக்களத்தைச் சேர்ந்த கூட்டுறவு அபிவிருத்தி அலுவலர் திரு இ.பாலச்சந்திரன், தலைமைக்காரியாலய கூட்டுறவுப் பரிசோதகர் திரு இ.விஜயமோகனராசா ஆகியோர் கலந்துகொண்டனர்.

இந்நிகழ்வில் கடந்த வருட இறுதியுடன் சுயவிருப்பில் ஓய்வுபெற்ற சமாசப் பணியாளரான திரு க.சண்முகம் அவர்களின் சேவைகளைப் பாராட்டி பலரும் உரையாற்றியதுடன், அவருக்கு பொன்னாடை அணிவித்து, ஞாபகார்த்த பரிசிலும் வழங்கிக் கௌரவிக்கப்பட்டது.

வடமாகாண பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம், அதன் அங்கத்துவ சங்கங்களின் உறுப்பினர்களுக்காக நடைமுறைப்படுத்திவரும் மாதாந்த ஓய்வூதியத் திட்டத்தின்கீழ் ஓய்வூதியத்தை பெற்றவர்களில் ஒரு தொகுதியினரை காணலாம்.

## கொடிகாமம் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்


நா.வேலுப்பிள்ளை


ஆ.தம்பிராசா


வே.வல்லிபுரம்


சி.அழகரத்தினம்


திருமதி இ.தேவராசா


சி.மகாலிங்கம்


சு.இராசையா

## காரைநகர் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்


திருமதி சி.அருணகிரி


நா.சமாரத்தினம்


திருமதி வை.கதிரவேலு


மு.கனேசன்


வே.பாலசிங்கம்

## உள்காவற்றுறை பதெசங்கம்


அ.தேவராசா

## கோப்பாய் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்


மா.தருமலிங்கம்


சி.உதயகுமார்


மு.வடிவேலு


பொ.அழகரத்தினம்


திருமதி வி.தேவராசா

## தெல்லிப்பளை பனை தென்னை வள அபி. கூட்.சங்கம்


திருமதி வே.கந்தசாமி


க.நாகராசா


திருமதி ச.சிவலிங்கம்


திருமதி மா.சற்குணம்

## பருத்தித்துறை சங்கம்


த.நவரத்தினம்


கி.தர்மலிங்கம்

## அரியாலை சங்கம்


நா.தங்கராசா


து.கனேஸ்

## பண்டத்தரிப்பு சங்கம்


திருமதி அ.பிரான்சிஸ்


இ.சிவலிங்கம்

### சிந்தனைக்கு......!

நீ வாழக்கையில் முன்னேற வேண்டுமானால், உன்னுடைய கால்களால்நடந்து போ, மற்றவர்களின் முதுகின்மேல் ஏறிப்போக விரும்பாதே. அது உனக்கு ஆபத்து.

பிணி வருவதற்குமுன், மூப்பு உண்டாகுவதற்கு முன், புத்திமங்கி மறைவதற்கு முன், சாவு நெருங்குவதற்கு முன், உடல் நலத்துடன் இருக்கும்போதே செய்யவேண்டிய நல்ல

## கோண்டாவில் சங்க ஒன்றுகூடல் நிகழ்வு


கோண்டாவில் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் பணிப்பாளர்கள், பணியாளர்கள் இணைந்து நடத்திய வருடாந்த ஒன்றுகூடல் சங்க மண்டபத்தில் இம்மாதம் 2ம் திகதி புதன்கிழமை பணியாளர் நலநோன்புக் கூட்டுறவுச் சங்கத் தலைவர் திரு ஐ.செல்வகுமார் தலைமையில் நடைபெற்றது.

வலிகாமம் கொத்தணித் தலைவர் திரு செ.செல்வராசா பிரதம விருந்தினராகவும், சமாசத் தலைவர் திரு நா.கணேசன், சித்தவைத்திய சேவைக் கூட்டுறவுச் சங்கத் தலைவர் திரு அ.சின்னராசா, கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் திரு பொ.மகேஸ்வரன், யாழ்.மாவட்ட பணியாளர் நலநோன்பு கூட்டுறவுச் சங்கத் தலைவர் திரு கா.சிவஞானம் சமாசப் பொதுமுகாமையாளர் திரு ஜே.பி. குணரத்தினம், வலிகாமம் கொத்தணி பொதுமுகாமையாளர் திரு க.சுதாகரன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும், பண்டத்தரிப்பு, சங்கானை, சுன்னாகம், தெல்லிப்பளை, மானிப்பாய், காரைநகர் சங்கங்களின் தலைவர்கள், பொதுமுகாமையாளர்கள் , ஊழியர் சங்கத் தலைவர்கள் ஆகியோரும், சித்தவைத்திய சேவைக் கூட்டுறவுச் சங்க முகாமைப் பணிப்பாளர் ஆகியோர் கௌரவ விருந்தினர்களாகவும் கலந்துகொண்டனர்.

இந்நிகழ்வில் கரோல் நிகழ்வும் கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன.

## துயர் பகிர்கின்றோம்

பிறப்பு 07 - 08 - 1954



இறப்பு 09 - 12 - 2012

**அமரர் திரு சுப்பன் வடிவேலு**

எமது சங்கத்தின் ஆரம்பகால உறுப்பினரும், நெறியாளர்குழு உறுப்பினரும், சமாசத்தின் பொதுச்சபை உறுப்பினரும், சித்தவைத்திய சேவைக் கூட்டுறவுச் சங்கத்தின் நிர்வாகசபை உறுப்பினருமாகிய கைதடி மேற்கைச் சேர்ந்த அன்னாரின் மறைவையொட்டி ஆறாத்துயரில் மூழ்கியிருக்கும் அவர்தம் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவிப்பதோடு, அன்னாரின் ஆத்ம சாந்திக்காகவும் பிரார்த்திக்கின்றோம்.

பணிப்பாளர்கள், பணியாளர்கள்,
சாவகச்சேரி ப.தெ.வ.அ.கூ.சங்கம்

## பொங்கல் பொதி ..............

1ம் பக்கத் தொடர்ச்சி

யாழ்ப்பாணம் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் தனது 66 அங்கத்தவர், பணியாளர்களுக்கு தலா ரூபா 500 பெறுமதியான பொதிகளையும், அச்சுவேலி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் தனது 200 அங்கத்தவர்கள், பணியாளர்களுக்கு தலா ரூபா 550 பெறுமதியான பொதிகளையும், சுன்னாகம் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் தனது 200 அங்கத்தவர், பணியாளர்களுக்கு தலா ரூபா 600 பெறுமதியான பொங்கல் பொதியினையும், தெல்லிப்பளை சங்கம் தனது 130 அங்கத்தவர், பணியாளர்கள், பாலர் பாடசாலை ஆசிரியர்கள் ஆகியோருக்கு தலா ரூபா 500 பெறுமதியான பொங்கல் பொதிகளையும் வழங்கி உதவியுள்ளன.


**அனைத்து கூட்டுறவாளர்களுக்கும் எமது இனிய நத்தார், புத்தாண்டு மற்றும் தைப்பொங்கல் நல்வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் நாம் பெருமகிழ்வடைகின்றோம்!**

பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கமாகிய நாம், கூட்டுறவுக் கொள்கைகளின்பால், குறிப்பாக எமது பனை தென்னை வளஞ்சார்ந்த சங்கங்களின் கொள்கைகளின் வழியில் நின்று, இலக்குகளை வெற்றிகொள்வதில் அர்ப்பணிப்புடன் உள்ளோம்.

**எமது சங்கத்தின் உற்பத்தி**

சுத்தமான முறையில் இறக்கப்பட்டு, சுகாதார முறையில் போத்தலில் அடைக்கப்பட்ட தரமான பனங்கள்ளினை எமது சங்கத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

**எமது சங்கத்தின் எதிர்காலத் திட்டங்கள்**

எமது சங்கமானது அங்கத்தவர், பணியாளர்களுக்காக எதிர்வரும் காலங்களில் கிராமிய வங்கியினை அமைத்து செயற்படவுள்ளதுடன், பல்வேறு நலன்புரித் திட்டங்களையும் செயற்படுத்தவுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறது.

**வடமராட்சி கிழக்கு பனை தென்னை வள அபி. கூட்டுறவுச் சங்கம்**

மருதங்கேணி தொ.பே.021 491 3754


இப்பத்திரிகை சமாசப் பதிப்பகத்தினால் அச்சிடப்பட்டு, இல.52, சோமசுந்தரம் லேன், சுண்டுக்குளியில் உள்ள வடமாகாண பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தால் 2013ம் ஆண்டு ஜனவரி மாதம் வெளியிடப்பட்டது.